திரு. கே. டி. கே. தங்கமணி : சார், தேனியிலுள்ள மருத்துவ மனையானது சிறப்பாகச் செயல்படுகிறது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் அங்கு சென்றிருந்தபொழுது அறிந்திருப்பார்கள். இப்பொழுது அங்கே ஒரு டாக்டர்தான் இருக்கிறார். அங்கு இன்னும் டாக்டரைப் போடுவதற்கும், அந்த மருத்துவமனையை விஸ்தாரப்படுத்தவும் உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, பொதுவாகவே பொறுப்புள்ள தலைவர்கள் கேட்கின்றபொழுது, எல்லா மருத்துவ மனைகளும் விஸ்தாரப்படுத்தப்பட வேண்டுமென்று ஒவ்வொரு மருத்துவமனையைப் பற்றியும் கேட்கும்பொழுது நாட்டுமக்களுக்கே சந்தேகம் உண்டாகிவிடும், மருத்துவமனை இருக்கிறதா என்று. ஏனென்றால் 10 இலட்ச ரூபாயில் இப்பொழுதுதான் தேனியில் கட்டி முடிக்கப்பட்டு 3 தினங்களுக்குமுன் திறந்து வைக்கப்பட்டது. அங்கே ஒரு பெண் டாக்டர் தேவை என்பதை இந்தத் துறை ஏற்று, நிதி இலாக்காவிற்கு சம்மதம் கேட்டு எழுதியிருக்கிறது. நிதி இலாக்கா அதை ஒத்துக்கொண்டால், அங்கே ஒரு பெண் டாக்டரும் நியமிக்கப்படுவார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சாவூர் இராசா மிராசுதார் மருத்துவ மனையிலுள்ள காசநோய்ப் பிரிவு

* 455 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை அரசினர் இராசா மிராசுதார் மருத்துவ மனையில் செயல்பட்டு வரும் மாவட்ட காச நோய் தடுப்பு நிலையத்தினை நாகையில் உள்ள மாவட்ட தலைமை மருத்துவ மனைக்கு மாற்றும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

* 456 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தற்போது தஞ்சை இராசா மிராசுதார் மருத்துவ மனையில் உள்ள காச நோய் பகுதியில் இருக்கும் படுக்கைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : 30 படுக்கைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 457, மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள்.